மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில்

மேயர் ஆர்.பிரியா நிகழ்ச்சி ஏற்பாட்டில் – மக்கள் முதல்வரின் மனித நேய விழா!

35 சாதனைப் பெண்களுக்கு 'சூரிய மகள்' விருது பிரம்மாண்ட விழா!

திருமதி. துர்கா ஸ்டாலின் – நடிகர்கள் சத்யராஜ் – பிரபு பங்கேற்று வழங்கினர்!

சென்னை,ஏப்.2–

மக்கள் முதல்வரின் மனிதநேய விழா "உலக மகளிர் தின விழா 2025" முன்னிட்டு, மேயர் திருமதி. ஆர்.பிரியா ஏற்பாட்டில், அமைச்சர் – மாவட்ட செயலாளர் – பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பல்வேறு துறைகளில் சாதனைப் புரிந்த 35 சாதனை பெண்களுக்கு "சூரிய மகள்" விருது வழங்கும் பிரமாண்ட விழாவில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள், புரட்சித் தமிழர் சத்யராஜ், இளைய திலகம் பிரபு ஆகியோர் விருதுகள் வழங்கி சிறப்பித்தனர்.

"மாங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாடியதற்கிணங்க மாதவம் புரிந்து பிறந்துள்ள பெண்கள் பலரும் இன்றைய சமூகத்தில் பெரும்பாலும் சமமாகவும், சுயமரியாதையுடனும் நடத்தப்படுவதற்கு தைரியத்தையும், நம்பிக்கையையும் ஆயுதமாக கொண்ட பெண்கள் இந்திய வரலாற்றில் வியக்க வைக்கும் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளனர். அப்படி பல்வேறு துறைகளில் குறிப்பாக அரசியல், பொருளாதாரம், விளையாட்டு, கலை, இலக்கியம், விவசாயம் சமூக நலன், வியாபாரம், கல்வி, ஆராய்ச்சி, மனிதவள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், ஊடகம் என பல்வேறு துறைகளில் சாதனை புரிந்து சரித்திரம்படைத்த 35 சாதனை பெண்களுக்கு நேற்று (01.04.2025) சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா உலக மகளிர் தின விழா 2025 முன்னிட்டு, "சூரிய மகள்" விருது வழங்கும் பிரம்மாண்ட விழா மேயர் திருமதி.ஆர். பிரியா ஏற்பாட்டில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் கிழக்கு மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில், திருமதி. துர்கா ஸ்டாலின், புரட்சித் தமிழர் சத்யராஜ், இளைய திலகம் பிரபு ஆகியோர் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 35 சாதனைப் பெண்களுக்கு "சூரிய மகள்" விருதுகள் வழங்கி சிறப்பித்தனர்.

இந்த விருது வழங்கும் விழாவில் எழுத்தாளர் **சிவசங்கரி**, பின்னணிப் பாடகி **பி.சுசீலா**, தமிழறிஞர் **முனைவர் சாரதா நம்பி ஆரூரன்**, நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் TAFE **மல்லிகா சீனிவாசன்**, நிர்வாக துணைத் தலைவர், அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் **டாக்டர் ப்ரீத்தா ரெட்டி**, தலைவர் தமிழ்ச் சைவப் பேரவை சிவஞான **ம. கலையரசி நடராசன்**, தொழில் முனைவோர் **நந்தினி**, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் தலைவர் **டாக்டர் சௌமியா சுவாமிநாதன்**, கல்யாண மாலை நிர்வாக இயக்குநர் **மீரா நாகராஜன்**, மாண்பமை முன்னாள் நீதிபதி **செல்வி.ஆர்.மாலா,** எழுத்தாளர் **இந்துமதி,** எழுத்தாளர் **பாரதி பாஸ்கர்**, வழக்கறிஞர் **அ.அருள்மொழி**, முன்னாள் தொலைக்காட்சி இயக்குநர் (பொதிகை)**ஆண்டாள் பிரியதர்ஷினி**, SIET கல்லூரி, தலைவர் வழக்கறிஞர் **பதர் சயீத்,** ISRO விஞ்ஞானி கே. **தேன்மொழி செல்வி**, SIET கல்லூரி பேராசிரியர் **முனைவர் பர்வின் சுல்தானா,** குமுதம்.முன்னாள் செய்தி ஆசிரியர், **லோகநாயகி ராமச்சந்திரன்** , ஆன்மீக சொற்பொழிவாளர் **தேச மங்கையர்க்கரசி**, சிவகாசி சார் ஆட்சியர் பிரியா **இரவிச்சந்திரன்**, சதுரங்க கிராண்ட் மாஸ்டர் **வைஷாலி ரமேஷ்பாபு**, மகப்பேறு மருத்துவர் **டாக்டர் எம்.எஸ்.ஹேமலதா**, முதல்வர் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் **சொ. சுகுணா**, (கொள்கை& ஆட்சி நிர்வாகம்) தி டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆசிரியர் **ஜ்லி மாரியப்பன்**, கேரம் வீராங்கனை **எம்.காசிமா**, கிரிக்கெட் வீராங்கனை **ஜி.கமலினி**, நிவாஸ் தொண்டு நிறுவனத் தலைவர் **லில்லி ஜோஸ்பின்**, கபடி வீராங்கனை **கார்த்திகா**, லூர்து உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் **அமலா ரஜினி,** பின்னணிப் பாடகி **மாலதி லட்சுமணன்**, எழுத்தாளர் **மாலா ஜெயின்**, அனிதா அச்சீவர்ஸ் மேற்பார்வையாளர் **இ.ஹெலன் அனிதா**, பாடகி **இசைவாணி** ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் விழாவில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், மாநகராட்சி மண்டலக் குழுத்தலை வர்கள், திருமதி. சரிதா மகேஷ்குமார், பி.ராமுலு, மாமன்ற பெண் உறுப்பினர்கள், கல்லூரி மாணவிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

'ஜிப்லி' தொழில்நுட்பத்துடன் கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 'கார்ட்டூன் வைரல்'!

சென்னை, ஏப்.1

'ஜிப்லி' தொழில்நுட்பத்துடன் கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "கார்ட்டூன் வைரல்' ஆகியுள்ளது.

ஜப்பானில் இயங்கும் 'ஜிப்லி'ஸ்டூடியோ, அனிமேஷன் படங்களை, கைகளால் வரைந்து கதைசொல்லும் முறையை 30 ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகம் செய்தது.

உலகம் முழுவதும் மிகவும் பாராட்டத்தக்க அனிமேஷன் ஸ்டுடியோக்களில் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இந்த ஸ்டுடியோ வடிவமைத்த ஜிப்லி அனிமேஷன் கதைகளில், 'மை நெய்பர் டோட்டோரோ', 'கிகிஸ் டெலிவரி சர்வீஸ்', 'போன்யோ' ஆகிய அனிமேஷன்கள் பல்வேறு சர்வதேச விருதுகளை பெற்றுள்ளன. மேலும், இந்த நிறுவனத்தின் அனிமேஷன் ஜிப்லி கதைகள் ஆஸ்கருக்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஜிப்லி அனிமேஷன் படங்கள் சமூகவலைதளங்களில் திடீரென தற்போது டிரெண்டிங் ஆகிவருகின்றன. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில் நுட்பத்தின் மூலம் ஒரு புகைப்படத்தை, அச்சு அசலாக ஜிப்லி அனிமேஷன் படங்கள் போல் உருவாக்கி. அதை நெட்டிசன்கள் டிரெண்டிங் செய்து மகிழ்ந்து வருகிறார்கள்.

சமீபத்தில், சினிமா பிரபலங்கள், கிரிக்கெட் பிரபலங்கள் என அனைவரும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி 'ஜிப்லி' கதாபாத்திரங்களாகவே தங்கள் புகைப் படத்தை மாற்றி டிரெண்ட். செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டு கழகம், நான் முதல்வன் திட்டத்தின் பயனாளிகளுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறந்த நினைவுகளை ஜிப்லி அனிமேஷன் படங்களாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கி உள்ளது. அதை, சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளது.

அந்த வகையில், நான் முதல்வன் பயனாளிகளுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செல்பி எடுத்துக் கொள்வது போலவும், அந்தத் திட்டத்தால் பயன் அடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கவுரவிப்பது போன்றும், அனைவருடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொள்வதுபோலவும் ஜிப்லி கார்ட்டூன் ஏ.ஐ. புகைப்படத்தை தொழில்நுட்பம் மூலம் உருவாக்கியுள்ளது.

மேலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நான் முதல்வன் திட்டப் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்குவது போன்ற புகைப்படத்தையும் ஜிப்லி அனிமேஷன் காட்சியாக உருவாக்கி டிரெண்ட் செய்துள்ளது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! அரசு கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைக்கிறார்!

வில்லிவாக்கம் மேற்கில் மனிதநேய விழா புகழரங்கம்:

நடிகர் பாக்யராஜ் – கரு.பழனியப்பன் – போஸ் வெங்கட் புகழுரை!

மேயர் பிரியா – தயாநிதிமாறன் எம்.பி – அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ பங்கேற்பு! கூ.பீ.ஜெயின் தலைமை!

சென்னை, ஏப். 2 –

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழாவை முன்னிட்டு மனிதநேயம் – 38 'தமிழ்வானில் மின்னும் தாரகைகள்! தாய்மண்ணின் சூரியத் தத்துவங்கள்!' எனும் தலைப்பில் இன்று (02–04–2025 – புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு, வில்லி வாக்கம் சிவன் கோயில் வடக்கு மாட வீதி, பேருந்து நிலையம் அருகில் புகழரங்க பொதுக்கூட்டம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக்குழுத் தலைவருமான கூ.பீ.ஜெயின் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி.,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், லதா வாசு எம்.சி., ஆர்.வரதன், ஜி,ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஜ.சி.எப்.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஆர். கோபாலகிருஷ்ணன், சிட்கோ பி.சுரேஷ்பாபு, கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ். கே.பி.தீபக்குமார்,ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேர்புரையற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைக்கிறார்.

நடிகர் பாக்கியராஜ், இயக்குனர் கரு.பழனியப்பன், நடிகர் நிழல்கள் ரவி, நடிகர் போஸ் வெங்கட் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர், மேயர் பிரியா ராஜன், கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம், கே. எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி., கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன்,

எஸ்.மணிமூடி, கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என்.வி. எம்.ஷேக் அப்துல்லா, வே.உமா காந்த, பரிதி இளம்சுருதி எம்.சி., வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி பாஸ்கர், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், சொ.வேலு எம்.சி., சரிதா மகேஷ்குமார் எம்.சி., பா.ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஐ.சி.எப். வா.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., டி.எஸ். பி.ராஜாகோபால் எம்.சி., எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.இராஜசேகரன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., எம். இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி., இரா. கலைச்செல்வி, ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர். எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க. பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி, புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபல்யூ. அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி.செ.துரை, வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தன், டி. ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர்.ஜெயக்குமார், ப.மலர்கொடி, சிட்கோ எஸ்.அன்வர்தீன், சாந்தி பில்லி, தே.ச.சுந்தர், ஜி.கே.வெங்கட்,

வழக்கறிஞர் பி.கோபிலதா, வழக்கறிஞர் ஜெ.சரவணன், எஸ்.எஸ். மணிகண்டன், வழக்கறிஞர் மா. முரளி வினோத், ஓசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ், டாக்டர் எம்.ஜி.திவ்யானந்தன், வழக்கறிஞர் சாந்தனு, ஸ்டண்டு வி.புஷ்பராஜ், ஜிம்.முரளி (எ) சையத், டி.பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த. விஜயகுமார், கே.தங்கவேல்ரா ஜன், டி.சையத்தியமத்துல்லா, செங்கை சண்முகம், ஆ.சுரேஷ்குமார்,

மற்றும் கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (BLA–2), பாக உறுபினர்கள் (BLC) அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஆர்.தீனதயாளன், மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இவ்வாறு வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளரும், மண்டலக் குழுத் தலைவருமான, கூ.பீ. ஜெயின் அறிக்கை விடுத்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் கனகம்மாசத்திரத்தில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர் ம.புவனேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் பேச்சாளர் தமிழன் பிரசன்னா, வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையற்றினார்கள் உடன் ப.அப்துல்மாலிக், கே.திராவிட பக்தன் , பேச்சாளர் க.ரா.சந்தியா ,கூளூர் எம்.ராஜேந்திரன், ம.கிரண், ஆர்.டி.இ.ஆதிசேசன், மாஸ்டர் சேகர், பா.உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, வி.கிஷோர், தா.மோதிலால், த.மா.சுகுமார், டி.ஆர்.திலீபன், ஆர்.யுவராஜ், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்